ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1791/16 - 2013 ජනවාරි මස 01 වැනි අඟහරුවාදා - 2013.01.01

*1791/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

இணைப்பு II

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
***(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)***

1. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ஆம் மற்றும் 48 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் குறிப்பிட்ட சட்டத்தின் 5, 6, 6ஏ மற்றும் 7 ஆம் பிரிவுகளின் கீழ், இலங்கையில் வதியும் ஆளொருவரினால், அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான கொடுப்பனவாக வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக் கொள்வதற்கு, அத்தகைய நாணயத்தினை ஏற்றுக்கொண்டவர் அத்தகைய ஆளின் உடமையிலிருந்து பின்வரும் விதத்தில் அத்தகைய நாணயத்தினை 7 நாட்களுக்குள் அகற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

   (அ) அத்தகைய நாணயத்தினை ஏற்றுக்கொண்ட ஆளினால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அவரின் பெயரில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்கொன்றில் வைப்புச் செய்தல் ;

   (ஆ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு விற்பனை செய்தல்.

2. இலங்கையிலுள்ள துறைமுகங்களுக்கு வருகைதரும் அல்லது அங்கிருந்து வெளிச்செல்லும் பயணிகளுக்கு தீர்வையற்ற சலுகைகளின்கீழ் பொருட்களையும் பணிகளையும் வழங்குவதற்கென அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களை கொண்டு நடாத்துகின்ற இலங்கையில் வதியும் ஆட்களுக்கு அவ்வாறு பொருட்களும் பணிகளும் எப்பயணிகளுக்கு வழங்கப்பட்டனவோ அப்பயணிகளின் வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற் கொள்ளாது இவ்வர்த்தமானியின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

பி. எச். ஓ சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
*2013, சனவரி 01.*

*1- 470*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.